உ

பரிவாஸ்ஹ்ரா௦நமஃ

# அமிர்தபிந்தூபநிஷதம்.

ரு-ய.

இஃது

யஜுர்வேதத்தின்

ஓர் சாகையின் இறுதியிலுள்ளது

மூலபாடம் பொழிப்புரை விசேஷவுரைகளுடன்

சிதம்பரம் ப்ரம்மவித்யா பத்ரிகாதிபரான

பரஸமய பஞ்சானன பண்டித பாஞ்சஜன்ய

ப்ரம்மஸ்ரீ

## கு. ஸ்ரீநிவாஸ தீக்ஷிதரவர்களால்

———:(O):———

வடமொழியிலியற்றப்பட்ட

அமிர்தபிந்தூபநிஷத்பிரகாசம்.

என்றவியாக்யானத்திற்கிணங்க

அவர்களாலேயே தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு

தமது

(கபிக்காவேரி) ஸ்ரீ ஜகத்குரு யந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது

இதன் விலை ௦—3—௦

19[illegible]

[illegible]

—— (*) ——

| [illegible] | ப்ருஷ்டம் | பங்க்தி: |
| --- | --- | --- |
| [illegible] | ௧ | ௬ |
| [illegible] | ௨ | ௧ |
| [illegible] | ,, | ௧௬ |
| [illegible] | ௩ | ௭ |
| [illegible] | ௪ | ௧௨ |
| [illegible] | ௫ | ௧௮ |
| [illegible] | ௬ | ௧ |
| [illegible] | ௮ | ௨௬ |
| [illegible] | ௯ | ௨௨ |
| [illegible] | ௰ | ௧௮ |
| [illegible] | ௧௧ | ௧௯ |
| [illegible] | ௧௩ | ௧ |
| [illegible] | ௧௪ | ௰ |
| [illegible] | ௧௫ | ௧௪ |
| [illegible] | ௧௬ | ௧௪ |
| [illegible] | ௧௭ | ௧௬ |
| [illegible] | ௧௮ | ௧௩ |
| [illegible] | ௨௰ | ௫ |
| [illegible] | ௨௧ | [illegible] |
| [illegible] | ௨௨ | ௧ |
| [illegible] | ௨௩ | ௧௨ |
| [illegible] | ௨௪ | ௧௨ |

[illegible]

[illegible]

# அமிர்தபிந்தூபநிடத விஷயானுக்கிரமணி.



அமிர்தபிந்தூபநிடத விஷயானுக்கிரமணி.

முற்றிற்று.

# அமிர்தபிந்து உபநிடதத்தின்

## முகவுரை

இவ்வமிர்தபிந்து உபநிடதமென்பது கிருஷ்ணயஜுர் வேதத்தைச்சார்ந்தது. ரிக்குவேதத்தில்நாதபிந்துவும், சாம வேதத்தில்தியானபிந்துவும், இருக்கின்றன. இதே யஜுர்வே தத்தில் தேஜோபிந்து, வென்ற மற்றோர் உபனிடதமுண்டு. அதுவும் இவ்வுபனிடதமும் ஓரே சாகையாதலால் இ வற்றின் வேற்றுமையறிவதற்காக இதனை அமிர்த பிந்துவெ ன்று அமிர்தவிசேடணத்தாலும், மற்றவைகளைதேஜஸ் முத லிய விசேஷணங்களாலும், வேற்றுமைப்படுத்திக்காட்டுவது வேதவழக்கம். அமிர்தபிந்து வென்பது பிந்துதத்துவத் தை சேவிக்கச்செய்வதற்கு மனோநிக்கிரஹமேபரமோபாய மென்று நிருபிக்கத்துடங்கி; அமனஸ்கமென்றதான ஏகராஜ யோகத்தைஒருவாறுசுருக்கிக்காட்டுகின்றது. இவ்வுபநிடத ங்கள் எல்லாம் பிந்து தத்துவத்தைப் பற்றி நிரூபிக்கின்றன வாதலின், பிந்துஉபநிடதமென்பது இவற்றிற் கமைந்தபொ துப்பெயர். இதன் பிரஸ்தாபம் ஸ்காந்தம் ஸனத்குமாரசம் ஹிதையில் மலையாசலகண்டத்திற் சேர்ந்த சிவதத்துவசுதா நிதியில் சிறிதுண்டு. உலகத்தில் எல்லாம் மெஞ்ஞானிகள் வழக்கில் மலிந்துகிடைக்கும் 'மந ஏவ மநுஷ்யாணாம் கா ரணம்பந்தமோக்ஷயோ:' என்ற வசனம் இதனிடத்தேயுள் ளது. ஆகவே இவ்வுபநிடதம் அமனஸ்கதாரகவித்தையென அறியற்பாலது. இதன் கண்ணமைந்த விஷயங்கள் ராஜயோ கிக்கு மிகவவசியங்கள். ஆதலால் இதனை யோகிகள் பலர் கொண்டாடுவர். ஆசிரியர் பரமஹம்ஸசங்கரானந்தயோகிக ளும், ஸ்ரீவித்தியாரண்ணிய முனிவரும், ஸ்ரீநாராயணபட்ட

ரும், உபநிஷத்பிரமேந்திரசுவாமிகளும், ஞானசரஸ்வதிசுவாமிகளும், மற்றும் சிலரும், இதற்குச் சிற்றுரையும் பேருரையும் இயற்றியுளர். யாமும் அமிர்தபிந்துப்பிரகாசம் என்ற பெயருடன் இவ்வுபநிடதத்திற்கோர்நல்லுரை செய்தோமாதலின், அதனின் குற்றங்களைந்து குணங்கொள்ளும் இயல்புள்ள பெரியோர் ஏற்று எமக்கு ஆசிகூறுமாறு அவர்களைத் தை வேண்டுகின்றோம்-

இங்ஙனம்

கிரந்தகர்த்தர்

[illegible]

[illegible]

𑌸𑌹 𑌨𑌾𑌵𑌵𑌤𑍁 । 𑌸𑌹 𑌨𑍌 𑌭𑍁𑌨𑌕𑍍𑌤𑍁 । 𑌸𑌹 𑌵𑍀𑌰𑍍𑌯𑌂 𑌕𑌰𑌵𑌾𑌵𑌹𑍈 । 𑌤𑍇𑌜𑌸𑍍𑌵𑌿 𑌨𑌾𑌵𑌧𑍀𑌤𑌮𑌸𑍍𑌤𑍁 𑌮𑌾 𑌵𑌿𑌦𑍍𑌵𑌿𑌷𑌾𑌵𑌹𑍈 । 𑌓𑌂 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌃 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌃 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌃 —

𑌓𑌂 [illegible]

[illegible]

[illegible]

[illegible]

சிவமயம்.

# அமிர்தபிந்தூபநிடதப் பிரகாசம்.

---

## அவதரணிகை

இனி. வேதநாயகி எல்லாவனர்த்தங்களையும் முற்றும் துலைத்து பரமபுருஷார்த்தமான மோக்ஷம் பெறதற்குரிய புண்ணியோபதேசம்செய்வாளாய் தம் அடியார்களிடத்து அவ்வியாஜவாத்சல்யத்தால்தோன்றும் முறை இது.

மநோ ஹி த்விவிதம் ப்ரோக்தம்
ஶுத்தம் சாஶுத்தமேவ ச
அஶுத்தம் விஷயாஸக்தம்
ஶுத்தம் நிர்விஷயம் ஸ்ம்ருதம் என்று.

(இ—ள்) மனமென்பது இருவகைப்படும் சுத்தமும் அசுத்தமுமாம் அசுத்தமென்பது விஷயத்துடன் கூடியது விஷயமற்றது சுத்தமெனப்படும். எ-து

(வி—ரை.) முற்றும் நிர்விஷயமென்று ஏற்படுவதில்லை. அப்படியானால் சங்கற்பசுவரூபமான மனமே முற்றுமொழிய நேரிடுமாகையாலென்க. ஆயினும் பிராகிருத. விஷயங்களை விட்டொழிந்து, அப்பிராகிருத திவ்வியமங்கள விக்கிரஹமனோஹரமாகிய சவிசேஷபிரம்மசுவரூபத்தை தியானிப்பது, சுத்தமெனப்படுமென்பது முடிந்தகருத்து. மற்றதுவெளி.

## அவதரணிகை

இது இருவகைப்பட்டால் எமக்குண்டாம் பிரயோஜனம் யாது என்ற வினா நிகழ, அதன் சுவரூபவறிவின் பிரயோஜனத்தை எடுத்துரைக்கின்றார்.

மந ஏவ மநுஷ்யாணாம்
காரணம் பந்தமோக்ஷயோ꞉ |
பந்தாய விஷயாஸக்தம் முக்த்யை
நிர்விஷயம் ஸ்ம்ருதம் என்று.

(இ—ள்) மனமென்பதே, மனிதற்கு பந்தத்திற்கும் மோக்ஷத்திற்கும், காரணமாவது. விஷயத்துடன் கலந்தால் பந்தத்திற்கும், விஷயத்தைத் துலைத்தால் மோக்ஷத்திற்கும். ஏதுவாகும். என்று,

(வி—ரை.) மோக்ஷத்தையே அபேக்ஷிக்கும் ஒருவனுக்குத தள்ளற்பாலதாகிய பந்தசுவரூபத்தின் அறிவும் கொள்ளற்பாலதாகிய மோக்ஷசுவரூபத்தின் ஞானமும் இன்றியமையாதாதலால் இங்கு சவிஷய நிர்விஷயங்களெனப்படும் இருவகைப்பட்ட அசுத்தசுத்தமனங்களின் நிலைமை எடுத்துரைக்கப்பட்டதென்க.

## அவதரணிகை

மேலே முமுக்ஷுவின் காரியத்தைச் சொல்லுகின்றார்.

யதோ நிர்விஷயஸ்யாஸ்ய
மநஸோ முக்திரிஷ்யதே |
அதோ நிர்விஷயம் நித்யம்
மந꞉ கார்யம் முமுக்ஷுணா | என்று

(இ—ள்) எதனால் நிர்விஷயமான மனதிற்கு முக்தி பிரயோஜனமாகின்றதோ அதனால் மனமானது என்றும் நிர்விஷயமாய் நிற்கும்படி முமுக்ஷுவினாலே செய்யத்தக்கது.

(வி—ரை.) இம்மனம், என்றும் சங்கற்பமே தருமமாயுடையதாகையால், அதன் சங்கற்பம் ஒழிந்து மோக்ஷத்திலேயே அம்மனம் ஆழ்ந்து நிற்குமாயின் அன்றே வீடுபேறு கூடுமாதலால், மனோஜயம் செய்யவேண்டுவதே முமுக்ஷுக்களுக்கு முதன்முயற்சி, என்று ஏற்பட்டது. இங்கு மோக்ஷத்தை மனதிற்குவிஷய

மென்பது உபசாரத்தால். அதுமனதிற்கு விஷயமாகாத சுத்தாதிஷ்டான சுவரூபமாதலால், என்றும் இடையறாது மோக்ஷத்தைய பேக்ஷிக்கும் ஒருவன் ஒருநிமிஷமேனும் மனதை விஷயவாசனையில் விடப்பொருக்கமாட்டானென்பது அதன் பொருள்

## அவதாரணிகை

மேலேயறியற்பாலதான மனதைக் குறித்துக் காட்டுகின்றார்

நிரஸ்த விஷயாஸங்கம்
ஸந்நிருத்தம் மநோ ஹ்ருதி |
யதா யாத்யுந்மநீபாவம்
ததா தத்பரமம் பதம் என்று.

(இ—ள்) விஷயசம்பந்தத்தை முழுதும் ஒழித்து, ஹிருதயத்திலே அடைக்கப்பட்ட மனம் எப்பொழுது ஆத்மபாவத்தையடைகின்றதோ அப்பொழுது அதுவேபரமபதமாம். எ—து.

(வி—ரை) ஹிருதயத்தில் = ஹிருதயத்திலுள்ளபுரீததநாடியில்; அடைக்கப்பட்டது = கும்பகத்தால்உட்செலுத்தப்பட்டது; விஷயசம்பந்தத்தை முழுதும் ஒழித்து = விஷயங்களுடன் சம்பந்திக்கக்கூடிய இந்திரியங்களின்பொருத்தமற்று; ஆத்மபாவத்தை = ஆத்மாவின் சுவரூபமாய் தோன்றும் அவித்யா மாத்திர சுவரூபத்தை; அடைகின்றது = சுழுத்திகாலத்தில் உள்ளதுபோல அகந்தைமாத்திரமாய் எஞ்சி நிற்கின்றது; அப்பொழுது = அவ்வவித்தையில் அதுவே = அந்நிலைமையே; பரமபதமாம் = பரமபதமாகப்பரிபாகம் பெறுமாம்; பரமம் = மாவென்பது அவித்யா சுவரூபமாதலால் அதனைக்கடந்தது பரமம்; பதம் என்பது ஆத்மசுவரூபம். ஆகவே பரமபதமென்பது அகண்டாத்வைத சிதாத்மரூபம். அங்ஙனமாயின், நாடோறும் அமையும் சுழுத்தியில் மனம் ஒருவாறுதற்செயலால் ஒழிவுற்றகாலத்து அவித்தை மட்டில் அதற்கு விஷயமாய் நிற்கும் இங்கு புருடன் தன்முயற்சியால் யோகமுதலிய கருவிகளைக்கொண்டு சாதித்துக்கொள்ளும் நிட்டையெனப்படும் மகா

சுழுத்தியில் மனதுக்குவித்தையெனப்படும் பிரம்மஞானமே விஷயமாதலால் அங்கத்தன்மை பெற்றமனம் பரமபதமென்றும் ஆன்மாவென்றும் குறிக்கப்பட்டது. இங்கு ஆன்மாவென்றெடுத்தது சவிசேஷசுவரூபத்தையே. அதுவே மனதிற்கு விஷயமாகக் கூடிய பொருள்களிற் சிறந்ததாகையால் அதன் தாதாத்மியத்தைப்பெறுதலே மனதிற்குச்சாத்தியமானபரமபதமாம். கைவல்வியம் மனதுடன் கலந்தேசாதிக்கமுடியாததாதலின், அஃதிதன்பொருளல்ல என்பது இம்மந்திரத்தின் முடிந்தகருத்து.

## அவதரணிகை

மனசைத்தடுப்பதும் மனம் ஒழிவதற்காகவேயன்றி வேறு வகையில் அதற்குப் பிரயோஜனமில்லையென்கின்றார்.

𑌤𑌾𑌵𑌦𑍇𑌵 𑌨𑌿𑌰𑍋𑌦𑍍𑌧𑌵𑍍𑌯𑌂
𑌯𑌾𑌵𑌦𑍍𑌧𑍃𑌦𑌿 𑌗𑌤𑌂 𑌕𑍍𑌷𑌯𑌂 |
𑌏𑌤𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌚 𑌧𑍍𑌯𑌾𑌨𑌂 𑌚
𑌶𑍇𑌷𑍋𑌽𑌨𑍍𑌯𑍋 𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑌃 | என்று

(இ—ள்) எதுவரையில் ஹிருதயத்தையடைந்து அது க்ஷயிக்கும் அதுவரையிலேதான் அதைத்தடுக்கவேண்டும் இதுவேஞானமும் தியானமுமாம் மற்றது அநியாயமும் விஸ்தாரமுமாம். எ—று.

(வி—ரை) அதுவரையில்=எதுவரையில் ஹிருதயத்தையடைந்து முற்றும்துலையுமோமனம் அதுவரையில்; இருதயத்தில் மனதைத்தடுத்தால் அங்குள்ளபுரீதத்தென்ற நாடியில் அதுபிரவேசிக்க, அங்கு, விஷயவாசனைகளைக்கொண்டு வந்துஉதவும் நாடிகளின் சம்பந்தமின்மையால் சங்கற்பத்தையே தன்சுபாவமாயுடையமனம் எரிதுரும்பற்றதீயைப்போல் தானேதுலையுமென்பதுகருத்து. அப்படிமனம் ஒழிந்தபிறகு அவன் தத்துவத்தையறிவது எப்படியெனில் கூறுகின்றார். "அதுக்ஷயிக்கும்" என்று, இங்ஙனம் இதயத்தின் கண்ணேவெறு விஷயங்களின் பற்றற்று மனம் நிற்குமாறு செய்வதே மனதுக்கு உபகாரவ்யமாம் அதுவே ஞானமாம் ஞானமெனில் மனதால் அடையக்கூடிய சுவரூப

ம் அதுவேதியானமாம் "தியானமெனில்" அச்சுவரூபத்தையடையுங்கருவி. ஆன்மாவின் அறிவை இந்திரியங்கள் வழிவிஷயத்திற் செலுத்தும், மனம் ஒழிந்திட்டால் ஆன்மசுவரூபம் குறைவற, விளங்குமென்பது தாத்பரியம். இங்கு மனதுலயிக்குமென்றதும் முற்றுமொழிந்திடுமென்றகருத்தாலல்ல மற்று ஆத்மசுவரூபமாத்திரத்தை விஷயமாய்க்கொண்டுநிற்றலேயாம். அவ்விதவத்தையும் சவிசேஷ பிரம்ம விஷயமாதலால் உத்தமவிஷயங்கிடைத்தமையால் வெளியில் தோன்றும் விபரீத விஷயங்களை விட்டொழித்து அங்கு ஈசனது அருட்டிருமேனியின் மகிமையில் ஆழ்ந்த அம்மனதுக்கு மீண்டும் பிரபஞ்சவிருத்தியுண்டாகாதாதலால் அந்நிலையுடையமனம் மோக்ஷஹேதுவாமென்றது. இதிலும் வேறுவழிசாங்கியம் முதலியதாம் அவைமனோவிலயத்தைச்சாதிக்கா. அவை ஒருவாறு ஞாயங்களெனவழங்கப்படினும் வீண்விரிவும் வியர்த்தவாக்கியங்களுமேயாம் அநியாயமெனப்பிரித்து அநியாயவிரியென்றும் பொருள் கொள்ளலாம்.

## அவதரணிகை

இனி அச்சமயத்தில் மனம் இருக்குநிலையைக் குறிக்கின்றார்

நைவ சிந்த்யம் ந சாசிந்த்யம்
அசிந்த்யம் சிந்த்யமேவ ச
பக்ஷபாதவிநிர்முக்தம்
ப்ரஹ்ம ஸம்பத்யதே ததா

(இ—ள்) சிந்தியமேயில்லை. அசிந்தியமுமில்லை சிந்திக்கக்கூடாதது, சிந்திக்கத்தக்கதே அது பக்ஷபாதம்விடுபெட்ட பிரமமாக அப்பொழுதாகும். எ—று.

(வி—ரை) அச்சமயம் மனதுக்குசிந்தியமேயில்லை சிந்தைக்கு விஷயமாய் தத்காலம் பிரசித்தமாகிய சம்சாரகசம் ஏதுமில்லை அதாவது விஷயவாசனையில்லை, இந்திரியங்களின் வழிசெல்லும் தன்மையற்று நிற்றலால் அதை இல்லையென்றது. அவையறியப்படாது என்ற பொருளில் "அசிந்தியமும்" = இத்தன்மைத்

தெனத்துணியப்படாநிலைமையிலுள்ள அனிர்வசனீயமாயாஸ்வரூபமும் இல்லை மாயாகிருதமான ஜீவபிரமவேற்றுமைத்தோற்றம் இடையருது சவிசேஷத்தைச்சிந்தித்து அதன்மயப்பட்டமையால், ஒழிந்தமையால் இல்லையென்றது கொளுத்திய ஆடைபோல் அன்றுமாயை இருந்தும் இல்லாதுபோலொத்ததாம் என்ற பொருளில் இங்ஙனமாயின்சவிசேஷமென்ற உத்தமவிஷயமுள்ள மனதிற்கு நிர்விஷயமென்று பெயரிட்டது எதுபற்றி எனின்கூறுகின்றார் சிந்திக்கக்கூடாதென்று. சிந்திக்கக்கூடாது = அகத்தேயாவது புறத்தேயாவது தன்னிலும் வேருய் உத்தமமாவது அதமமாவது சிந்தித்தல் மனதுக்கு அப்பொழுது அடாது. அங்ஙனமாயின் சூன்யமாகாதோவெனின் அன்றெனச்சிந்திக்கத்தக்கதே என்றதால் குறிக்கின்றார். சிந்திக்கத்தக்கதே = தியானிக்கப்பாலதாயுள்ள பிரமசுவரூபமே; காரணமாகிய அதனிடத்தே மனம் லயித்தலாலென்க. காதன்மிகுதியால் காதலிகளிடத்து அபேதத்தோற்றமுண்டாய் அவரின்பத்தைத் தன்இன்பமாகவும் அவர்துக்கத்தைத் தம் துக்கமாகவும் அனுபவிக்கும் அனுபவம் பிரத்தியக்ஷத்தில் கிடைக்குமாதலால் இங்கும் அன்புடன் தியானிக்கப்படும் பிரமத்திடத்து அபேதமடைந்த மனத்துக்கு இது என்னுடையது என்பதாதிமமதை முற்றும் துலையுமாதலின், அதுவே அங்கு பரமலயமாம். இதனுல் வேருகநினைத்து உபாசித்தல் காரிய காரியல்லவென்று சொல்லப்பட்டது. இங்ஙனமாயின் மனதிற்கு வந்தலாபம் யாதெனின் நிரூபிக்கின்றார் பக்ஷபாதமென்பதாதியால். பக்ஷபாதம் = தாரதம்மியம் தேவர், மக்கள், திரியக்கு, என்பதாதிமேலும் கீழுமாயுள்ளபல்வகைச் சரீரங்கள். அவைகள் விடப்பட்டால் எவ்விதமான இரட்டைத்தோற்றங்களுமில்லாத ஜகத்காரணமான பிரமசுவரூபம் அன்று ஆகும் = வெளிபாகும் பிரத்தியகாத்மசுவரூபமாய் தோன்றும்: என்று இதயத்தில் மனம்தடுக்கப்படுமோ அன்று அவ்விதயத்துள்ள சிதாகாசரூபமான சிதம்பர மஹாசக்திசகித சிவசுரூபமானது மனத்துக்கு விஷயமாய் மனதைத்தம்மிடத்தே ஒடுக்கிக்கொள்ள, காலத்தால் மாயைமுற்றும் துலையநிர்விசேஷசுவரூபம் எஞ்சிநிற்கும் என்றது மந்திரத்தின் முடிந்தகருத்து.

## அவதாரணிகை

இனி மனதை உபாயமான யோகத்தை நிரூபிக்கின்றார்.

ஸ்வரேண ஸந்தயேத்யோகம்
அஸ்வரம் பாவயேத் பரம்
அஸ்வரேண ஹி பாவேந
பாவோ நாபாவ இஷ்யதே

(இ-ள்) சுவரத்தாலே யோகத்தைச்சேர்த்துப்பிறகு அசுவரத்தைப்பாவிக்கவேண்டும் அசுவரமாகிய அனுபவத்தாலே பாவனமில்லாதிருத்தலே பாவனமெனப்படுமாம்.

(வி-ரை) "சுவரத்தாலே" = பிரணவத்தாலே; யோகத்தை = யோகமென்பது எட்டங்கங்கள் உடையதாயினும் பிரகிருதம்பற்றி பிராணாயாமத்தை அதன்பொருளாய்க் கொள்ளவேண்டும். "சேர்த்து" = ஓயாது குரு உபதேசத்தின்வழி அப்பியசித்து பிறகு அதன்முயற்சியில் அசுவரத்தை சுவரங்களெனப்படும் சொற்களால் விவகரிக்கப்படாது நிற்கும் பொருளை; பாவிக்கவேண்டும் = தானென அறிந்து தன்மயமாய் சிந்திக்கவேண்டும். இனி பிரணவ யோகத்தால் பரத்தைதியானிக்கும் வழியைக்குறிக்கின்றார் அசுவரமாகிய வென்பதாதியால், சுவரமென்பது ஈண்டுவாசகம் அஃதில்லாததென்றால் இந்தப்பிரணவம், வாசகம், இதன்பொருள் சிவனென்ற வேற்றுமையற்று பிரணவமே சிவனென்ற அபேதத்தால் தியானிப்பது. இதனை அனுபவமென்றமையால் இது கேவலபாவனையல்ல. நேரிலேயே அத்தன்மைகிடைக்கும் காதல்மிகுந்த காதலி அக்காதல்மிகுதியால் கண்ணூனமான கணவனையும் காமனெனநினைத்து அனுபவிப்பது பிரத்தியக்ஷமாய் இருத்தலின் அவ்விதமில்லாது சர்வகல்யாணகுணமணிமாலா பரிபூர்ணனாய், அருட்டிருமேனி கொண்டெழுந்தருளும் அம்புலிசூடிஎம்பிரான் திவ்விய விக்கிரகத்தை எப்பேய்மனமும் தான் கண்டு அனுபவிக்காதொழியும் எங்ஙனம் கோளபந்தமுதலியவற்றில் இஃதேககோளமென்றெண்ணமே காரியத்திற்குபயோகமாகும் பரமதத்துவத்தை ஒட்டுகின்றது. அங்ஙனம் பிரணவத்தையும் சிவத்தையும் ஒன்றாய்நினைத்து உருகிஉய்திடும் அன்பர்செய்திடும், உற்றநாதோபாஸனம் உத்தமயோக பிராணாயாமமாதலின் அஃதுமனதை சர்வகாரண ஆன்மசுவரூபத்தின் கண்ணே லயிக்கச்செய்வது திண்ணமாமென்பது

இதன்கருத்து. இங்ஙனமாயின் அம்மனமடையும் நிலைமையைக் குறிக்கின்றார் பாவனமில்லாதிருத்தலே என்றதால் "பாவனமில்லாதிருத்தல்" = எவ்விதமான விஷயவாசனையுமற்று நிற்றல். அச்சமயம் மனம் அந்நிலைப்படுமென்பதை முன்னே நிரூபித்தோமாதலாலெங்கே. பாவனமில்லாதிருத்தல் = பாவனமென்றதால் உண்மை இன்மை என்ற இரண்டுதோற்றமற்று எல்லாம்பாவமயமாக உண்பொருளான பிரமசுவரூபமாகவேதோன்றுகிறது அந்நிலைமையாம். பவன் என்ற பரமேசுரனை முதற்காரணமாகப்பெற்ற பாவமெனப்படும் இவ்வுலகமெல்லாம் உத்தமனான யோகிக்கு அவன்மயமாகவேதோன்று மென்பது கிடைத்தது. அதனால் யோகிகள் அனுபவத்தைக் குறிக்கும் இதன்முன்மந்திரம் பக்ஷபாதம் விடுபட்டு பிரமமாகும் என்றது. இதனையேசுபாஷிதத்தில் பர்த்திருஹரிசொல்லுகின்றார். [illegible] = இப்போது உத்தமமாகிய விவேகாஞ்சனம் பூண்ட எமக்குச் சமமாய்ப்போனகண்ணுக்கு உலகமெல்லாம்பிரமமாய்த்தோன்றுகின்றதென்றார். ஆசிரியர் புஷ்பதந்தரும் அங்ஙனமே அருளிச்செய்தார். ந வித்மஸ்தத்தத்த்வம் வயமிஹ து யத்த்வம் ந பவஸி, யாம் அவ்வுண்மையறிந்தோமில்லை நீயாகாப்பொருள் உலகத்தில்யாதுளதென்று இதனால் சுருதிஸ்மிருதிபுராணங்களில் நிரூபிக்கப்பட்ட பிரமம் சர்வசுவரூபமென்பது தழுவப்பட்டது.

## அவதரணிகை

தியானிக்கப்பாலதாயுளது, பிரத்தியகாத்மசுவரூபமும் மனோலயத்திற்கு அதிஷ்டானமும் நிரூபிப்பாராய் யோகத்தின் பயனை நிரூபிக்கின்றார்.

தத்த்வம் நிஷ்கலம் ஶாந்தம்
நிர்விகல்பம் நிரஞ்ஜநம்
[illegible]
[illegible] ॥

(இ—ள்) அதுவே நிஷ்களமான பிரமமாம் நிர்விகல்பமாம் நிரஞ்சனமாம் அந்தபிரமம் யானெனவறிந்தால் பிரமமாயாவது நிச்சயம்.

(வி—ரை.) 𑌨𑌿𑌷𑍍𑌕𑌲𑌂 𑌨𑌿𑌷𑍍𑌕𑍍𑌰𑌿𑌯𑌂 𑌶𑌾𑌨𑍍𑌤𑌂 𑌨𑌿𑌰𑌵𑌦𑍍𑌯𑌂 𑌨𑌿𑌰𑌂𑌜𑌨𑌂 𑌅𑌮𑍃𑌤𑌸𑍍𑌯 𑌪𑌰𑌂 𑌸𑍇𑌤𑍁𑌂 = நிஷ்களமாயும், நிஷ்கிரியமாயும் சாந்தமாயும் நிரவத்தியமாயும் பற்றற்றதாயும் அமிருதத்திற்கக்கரையாயுமுள்ளது என்ற சுவேதாசுவதரமந்திரவியாக்கியானத்தில் நிஷ்களம் முதலிய சொற்களை நன்கு விரித்தோமாதலின் ஈண்டு அவற்றை மீண்டும் விரித்தோமிலேம். இன்னணம் குறிக்கப்பட்ட இலக்கணமுடைய பிரமம் பரோக்ஷமாய் கைலாசம் முதலிய தேசத்துளதாகவும் அப்பிராகிருத திவ்வியமங்களவிக்கிரகமுளதாகவும் தியானிக்கப்பட்டதை உண்மையில் தானெனவறிந்தால் = தன் சுவரூபமாய் இருப்பதைத்தெளிந்து பிரமமாயாவான் = மீக்ஷியில்லாதபிரமசுவரூபனாய் நிற்பான்; பிரமத்தையறிந்தவன் பிரமமாயாவான் என்றபலசுருதிகளில்குறித்தவாறு அவன் மோக்ஷத்தைப்பெறுவான் என்பதுகருத்து. இங்குபிரமமாயாவதும் புதிதேதுமில்லை அநாதியாய்உள்ள அவித்தையொழிதலேமோக்ஷமென்று உபசரிக்கப்படுதலால்.

## அவதரணிகை

ஆத்துமா நித்தியபுத்த சுத்த சச்சிதானந்த ஏகரசனென்பதை நிரூபிக்கின்றார்.

𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌮𑌨𑌨𑍍𑌤𑌂 𑌚<br>
𑌹𑍇𑌤𑍁𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌨𑍍𑌤𑌵𑌰𑍍𑌜𑌿𑌤𑌮𑍍 ।<br>
𑌅𑌪𑍍𑌰𑌮𑍇𑌯𑌮𑌨𑌾𑌦𑌿𑌂 𑌚<br>
𑌯𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌵𑌾 𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 𑌬𑍁𑌧𑌃 ॥

(இ—ள்) நிர்விகல்பமாயும் அனந்தமாயும் ஹேதுதிருஷ்டாந்தம் இவை இல்லாததாயும் அப்பிரமேயமாயும் அநாதியாயுமுள்ள பொருள் எதுவோ அதனையறிந்தால் வித்வான் முக்தியுடைவான்.

உ

(வி—ரை) "நிர்விகல்பம்,,=விகல்பமென்ற சொல்வழிக்கு அகப்படாதது, அனந்தம் தேசம், காலம், வஸ்து வென்றமூவகையளவைகளையுங்கடந்தது. "ஏது=''காரணம், "திருஷ்டாந்தம்''=உபமானம் அவ்விரண்டுமில்லாதது. அதுவேசர்வகாரணமாதலாலும் அதற்குச்சமானமதிகமொன்றில்லாமையானும் அப்பிரமேயம்=நுண்ணறிவுமுதலிய கருவிகளால் மட்டும் துணிதற்குரியது "அநாதி''=எவ்வழியிலும் ஆதிசம்பவிக்கப்பெறாததுளது அதனையறிந்து குறித்தவிலக்கணமுரியதெனத்தெளிந்து வித்வான்=அஃதன்றிவேறில்லை என அறிந்தவன்; அவனைவித்வானென்றது உபசாரமேயாம். முக்தியடைவான்=அவித்தைகாமம் கன்மம் க்லேசம் முதலிய சம்ஸாரமூலங்களால் விடுபடுவான் பழுத்தபழங்கள் காம்பைவிட்டுக்கழலுவது போலவாமென்க.

## அவதாரிகை

இங்ஙனம் அநாதியாய் நித்தியமுக்தசுத்தனாய் உள்ளவனே ஆன்மாவாயின் எதனால் இவனுக்கு சுகி துக்கி என்பதாதிவியவகாரங்கள் தோன்றினவெனை ஆசங்கை நிகழ, இவ்வியவகாரங்களெல்லாம் பரமார்த்தத்திலுள்ளனவல்லவென நிரூபிக்கின்றார்.

𑌨 𑌨𑌿𑌰𑍋𑌧𑍋 𑌨 𑌚𑍋𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌃
𑌨 𑌬𑌦𑍍𑌧𑍋 𑌨 𑌚 𑌸𑌾𑌧𑌕𑌃
𑌨 𑌮𑍁𑌮𑍁𑌕𑍍𑌷𑍁𑌰𑍍𑌨 𑌵𑍈 𑌮𑍁𑌕𑍍𑌤𑌃
𑌇𑌤𑍍𑌯𑍇𑌷𑌾 𑌪𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌤𑌾 ॥

(இ—ள்) நிரோதமில்லை உத்பத்தி இலலை, பத்தனல்ல, சாதகனல்ல முமுக்ஷுவல்ல மற்று முக்தனுமல்லஇதுவே பரமார்த்தம்.

எ—று.

(வி—ரை). "நிரோத'' மென்பது அவித்தியாசம்பந்தம் இஃது உவலக்கணம் பிரபஞ்சமெல்லாம் இதன்பொருளேயாம். உத்பத்தி=பிறப்பு எல்லாபாவவிகாரங்களும் இதனால் குறிக்கப்பட்டன. இவை இல்லை அசத்தியமென்றமையால் அவித்தையும் அதின் காரியங்களையும் மித்தையெனக் குறித்ததாயிற்று. இவைகளா.

ல் முடிந்ததீர்மானத்தை எடுத்துக்காட்டுகின்றார் பத்தனென்ப தாதியால். "பத்தன்" ஸாதகன் முமுக்ஷு முக்தன் என்றநால்வகை வேற்றுமைகளும் கற்பிதங்களேயாம். பத்தன் = பாலியத்தில் குருகுலத்தில் கட்டுண்ட மாணி. சாதகன் = கன்மங்களை இடையுறாதுசெய்துவரும் இல்லறத்தவன். முமுக்ஷு = மோக்ஷத்தைஎதிர்பார்க்கும தபஸ்வி அதாவது வானப்பிரஸ்தன்; முக்தன் எல்லாக் கருமங்களையும் விட்டொழித்த எதி. ஆக இந்நான்காச்சிரமங்களும் வஸ்துவிற்கற்பிக்கப்பட்டனவேயாம். ஆதலின் பரமார்த்தமல்ல அகண்டமாய் நிர்விகல்பவஸ்துவினிடத்து எவ்வித விகல்பமும் கூடாமையால், ஆயின் இஃதெல்லாம் வியாவகாரிகமே என்றேற்பட்டது. அந்தவிவகாரந்துலைந்தால் அதேமுக்தி என்பார். இவ்வகையுண்மையறிவே காலத்தால் பரிபாகப்பட்டுமோக்ஷமாய் முடியுமென்பது ஹிருதயம். அதுவே உண்மனுவஸ்தையாம் அதனையே முதலில் நிரூபித்தார் நிர்விஷயமான மனது முக்திக்கு ஹேதுவாமென்று.

## அவதாரணிகை

இங்ஙனமாயின் ஒன்றுக்கொன்று முற்றும்விலக்கணமான தேவர் மக்கள் திரியக்கு முதலியவர்களுக்குஒற்றுமைஎங்ஙனம்ஒவ்வுமென்ற ஆசங்கையையொழிக்கின்றார்.

ஏக ஏவாத்மா மந்தவ்யோ
ஜாக்ரத்ஸ்வப்நஸுஷுப்திஷு
ஸ்தாநத்ரயவ்யதீதஸ்ய
புநர்ஜந்ம ந வித்யதே ॥

(இ—ள்) ஜாக்கிரம், சுவப்பனம், சுஷுப்தி இம்மூன்றிலும் ஒரே ஆத்மா உள்ளவனென நினைக்கவேணும். மூன்று ஸ்தானங்களையும் கடந்தவனுக்கு புனர்ஜன்மம் கிடையாது.

(வி—ரை.) எப்படி நாடோறும் யாமனுபவிக்கும் மூவவஸ்தைகளில்ஆத்மா ஒருவனேயாயினும், வேற்றுமையுள்ளவன்போலத்

தோற்றுகின்றான். இனி அங்ஙனம் கூறுவது கூடாது. சாக்ரத்தில் அமைந்த காரணகலாபங்களைக்கொண்டு ஒன்றுடனொன்று சம்பந்திக்காத காரியங்களை முடிக்கின்றான். அவனே மனதுடன் கூடி சுவப்பனத்தில் நானாவிதமான ஜடஜீவாசுவரங்களுடைய பிரபஞ்சத்தை வியவஸ்தையுடன் அனுபவிக்கின்றான். மீண்டும் சுழுத்தியில் மரித்தவனைப்போல் எல்லாவற்றையும் மறந்தவனைப்போல் இருந்தாலும், மீண்டும் விழித்து நான் வீட்டைக்கட்டினேன், பலகனவுகண்டேன், சுகமாய்த் துயின்றேன் என்று ஒருவனே அனுபவிக்கின்றான். ஆயின், அவ்வவத்தைகளில் 'விலக்கணமென்பது எங்ஙனமெனில், கூறுதும். உலகத்தில் எவனும் தான் குழந்தையாய் இருந்தகாலத்து வஸ்திரமின்றி மேனோக்கிபடுத்து பிறர்வெறுக்கத்தக்க நிலைமையில் மலஞ்சிறுநீர்களில் மகிழ்ந்துகிடந்ததையும்; மற்றுமுள்ளகோரத்தையும் யௌவனமடைந்தபிறகு நினைப்பதுண்டோ? முற்றிலும் முதுமை சென்ற ஒருவன் நூறுவது வயதில் தாம் பெண்களின் விலாசத்திற்கட்டுண்டு பட்டபாட்டையேனும் நினைப்பதுண்டோ. ஆயினும் யான் குழந்தையாய் இருக்க என்தாய் வளர்த்தாளெனவும், யௌவனத்தில் அவ்விதமிருந்தேனெனவும், அவன் பழகுவது மட்டுமுண்டல்லவா. அதுபோலவே தேசம் காலம் வேறுபட்டாலும் சுரரும் நரரும் திரியக்குகளும் ஸ்தாவரங்களுமென சரீரங்கள் வேறுபடுமேயன்றி, ஆத்மா எங்கும் வேறுபடுவதில்லை. எவன் மூன்றிடங்களையும் கடந்தவன், போக்தா, போக்கியம், போகம் முதலிய திரிபுடிஞானஹீனன்? அவனுக்கு வறுத்தவிதை முளைக்காதென்பது போலமீண்டும் ஜன்மமின்மையால் விகாரமொழிந்தவிடம் கைவல்யம் சித்திக்குமென்பதாயிற்று.

ஏ—ஜ.

## அவதரணிகை

இவ்வளவு திருஷ்டாந்தங்களால் ஓர் ஆத்மாபலவகையோனிபேதங்களைக் காலக்கிரமத்தால் பெற்று நிற்றல் உசிதமன்றென்ற மயக்கமொழியினும், ஒரேகாலத்து ஒரே ஆன்மா பலரூபங்களைப் பெற்று நிற்றல் கூடுமோவென்ற மயக்கம் நிகழுமாயினும், அதனை திருஷ்டாந்தங்கூறி ஒழிக்கின்றார்.

𑌏𑌕 𑌏𑌵 𑌹𑌿 𑌭𑍂𑌤𑌾𑌤𑍍𑌮𑌾
𑌭𑍂𑌤𑍇 𑌭𑍂𑌤𑍇 𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 |
𑌏𑌕𑌧𑌾 𑌬𑌹𑍁𑌧𑌾 𑌚𑍈𑌵
𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇 𑌜𑌲𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌵𑌤𑍍 ||

(இ—ள்) ஒரே பூதாத்மா அபூதத்திலும் ஒவ்வொரு பூதங்களிலும் குடியிருக்கின்றான். ஒருவனாகவும் அநேகனாகவும் ஜலசந்திரனைப்போலவே காணப்படுவானா. எ—து

(வி—ரை.) ஒருவனே '𑌏𑌕 𑌏𑌵 𑌰𑍁𑌦𑍍𑌰𑍋 𑌨 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌾𑌯 𑌤𑌸𑍍𑌥𑍇 | [illegible] 𑌏𑌕𑌃 | [illegible]' ஒருவனன்றோ ருத்திரன் இரண்டிலாதிருந்தான். அதனாலேயே ருத்திரன் ஏகன் என்று சொல்லப்படுவான். இவ்வுலகத்திற்கு எந்த ஏகன் இருந்தான். என்பதாதி பலவிடங்களில் பரமேசுவரனை ஒருவனெனக்குறித்தமையால் அவனே இங்கு ஏகனெனப்பட்டான். பூதாத்மா = பூதரூபமாயும், ஆத்மாவாயுமுள்ளவன் ஜடன் சேதனன் உபயரூபனென்பது அதன்பொருள். அபூதத்திலும் = பூதவிகாரமல்லாத அப்பிராகிருதமாகிய திவ்வியமங்களவிக்கிரஹத்தில் உமைபாகம் முதலிய லக்ஷணங்கள் அமைந்தசரீரத்தில்; பூதங்களிலும் = பிரகிருதி சம்பந்தமுற்ற சரீரங்களிலும்; இருப்பான் = தான் என அதிட்டித்து நிற்பான். ஒருவனாகவும் = சதாசிவஸ்வரூபனாகவும்; பலவாகவும், பிரமா, விஷ்ணு, ருத்திரன், சரஸ்வதி, இலக்குமி, பார்வதி, கணேசன், கந்தன் முதலியரூபங்களால்; அல்லது ஒருவனாகவும் = விராட்ரூபனாகவும் பலரூபனாகவும் இங்ஙனம் வேற்றுமைப்பட்டதோற்றத்திற்கு ஏதுவைக்குறிக்கின்றார். அபூதங்களிலும் பூதங்களிலும் என்பதாதியால். இதனால் மாயை இடத்தும், அவித்தையிடத்தும் பிரதிபிம்பித்த சுத்தசைதன்னியமே ஈசுவரனெனவும், ஜீவனெனவும் இருவகைத்தோற்றத்திற்கும் இடமானது ஆத்மசுவரூபமொன்றேயாமென்றதாயிற்று. அதற்கு திருஷ்டாந்தம சொல்லுகின்றார் ஜலசந்திரனைப்போலஎன்று. ஜலம் என்றது தண்ணீர்ச்சால் சிறு கரகம் வாவி முதலியவற்றினும் பெரிதுமான பல ஆதாரங்களைக் குறிப்பது மேல்கண்ட ஆதாரவேற்றுமை

பற்றி சந்திரன் பலவாணுய்க்காணப்படுவதுபோல, ஆத்துமாவும் உபாதிவேற்றுமையால்பல்வகைப்பட்டுத்தோன்றுகின்றான் என்பது கருத்து. இங்ஙனமாயின் ஜீவனும், ஈசுவரனும் சைதன்னியப்பிரதிபிம்பமாய் முடித்தலால் பிரதிபிம்பமென்பது வஸ்துவன்றாதலின் ஆத்மா அங்ஙனமாகவே ஆத்மநாஸ்திக்கியம் தோன்றுமேவெனின், அக்குற்றம் அதனிடத்தணுகாதபடிமேல நிரூபிப்பார்.

## அவதாரணிகை

முன்மந்திரத்தின் இறுதியில் குறிக்கப்பட்டவாறு அம்மந்திரார்த்தத்தில் தோன்றும் ஆத்மநாஸ்திக்கியவாத தோஷத்தைப் பரிஹரிக்கின்றார்.

𑌘𑌟𑌸𑌂𑌵𑍃𑌤𑌮𑌾𑌕𑌾𑌶𑌂
𑌨𑍀𑌯𑌮𑌾𑌨𑍇 𑌘𑌟𑍇 𑌯𑌥𑌾 ।
𑌘𑌟𑍋 𑌨𑍀𑌯𑍇𑌤 𑌨𑌾𑌕𑌾𑌶𑌃
𑌤𑌥𑌾 𑌜𑍀𑌵𑍋 𑌨𑌭𑍋𑌪𑌮𑌃 ॥ என்று

(இ—ள்) குடத்தால் மூடப்பட்ட ஆகாசமானது குடத்தைத்தூக்கிக்கொண்டு போகும்பொழுது குடம்போகுமேயன்றி ஆகாசம்போகாது அப்படியே ஜீவன் ஆகாசத்தைப்போலொத்தவன்.

(வி—ரை) எப்படி ஒரே ஆகாசம் எங்கும் வியாபகமாய் இருந்தும் குடத்தில் அகப்பட்டு குடாகாசம் என்று வழங்கப்பட்டாலும், குடத்தை ஓரிடத்தைவிட்டுக்கொண்டுபோகுங்கால் குடம்கொண்டுபோகப்படுமேயன்றி ஆகாசம் கொண்டுபோகப்படாதோ, அப்படியே ஜீவன் ஆகாயத்தைப்போலொத்தவன். எப்படி ஒரே ஆகாசமானது குடம் படம்முதலிய உபாதிகளால் சிறிது பெரிதாக வழங்கப்படுகின்றதோ, அங்ஙனம் ஒரே ஆன்மாபலசரீரங்கள் என்ற உபாதிகளால் உயர்வுந்தாழ்வுமாக வழங்கப்படினும், அவன் ஆகாயம்போல் பரிபூர்ணனுய் அசலனுய் உள்ளவன். பூர்ணனுயும் இருப்பான் என்பது இம்மந்திரத்தின் முடிந்தகருத்து. அற்றேல் எங்கும் பரிபூர்ணனை ஓர் ஆன்மாவுக்கு சுகம் துக்கம் ச

வர்க்கம் நரகம் முதலியவற்றிற்கு வேற்றுமை எங்ஙனம் உண்டாமெனின், அவ்வவ்வந்தக்கரணங்களின் வேற்றுமையாலாவது அவற்றின் ஆற்றல் வேற்றுமையாலாவது, சுவர்க்கநரகாதிவியவஸ்தைகள் கூடுமென்க. அங்ஙனமாயின் முன்னே குறிக்கப்பட்டபிம்பப்பிரதிபிம்பபாவத்திற்கு கெதியாதெனின், ‘நீர்அசைய நிழல்அசையும் நீர்பெருக நிழற்பெருகும், நீர்க்குறுக நிழற்குறுகும்’ என்பதாதி அனுபவம் உலகத்தில் நிகழ்வதால் உபாதியின் குணங்களை அனுசரித்து நிற்றல் மட்டே அவ்வுபமானத்தில் ஏற்றுக்கொள்ளத்தக்கது. என்று ஜகத்குருஸ்வாமிகளே அதற்குவியவஸ்தை கூறியிருக்கின்றனர்.

## அவதரணிகை

மேலே உபாதிபேதத்தாலேயே ஜீவேசுவராதி சமஸ்தபேதங்களும் சைதன்னியத்திடத்து அமையுமென்கின்றார்.

𑌘𑌟𑌵𑌦𑍍𑌵𑌿𑌵𑌿𑌧𑌾𑌕𑌾𑌰𑌂
𑌭𑌿𑌦𑍍𑌯𑌮𑌾𑌨𑌂 𑌪𑌨𑌃 𑌪𑌨𑌃।
𑌤𑌦𑍍𑌭𑍇𑌦𑍇 𑌚 𑌨 𑌜𑌾𑌨𑌾𑌤𑌿
𑌸 𑌜𑌾𑌨𑌾𑌤𑌿 𑌚 𑌨𑌿𑌤𑍍𑌯𑌶𑌃॥ என்று.

(இ—ள்) கடம்போல் பல்வகை ஆகாரங்கள் அடிக்கடிமாறினால் அவைகளை வேறாக அறிவான் அவன் நித்தியமாகவே அறிவுடையவனாவான். எ—து.

(வி—ரை) எங்ஙனம் சிறிதும் பெரிதுமாயுள்ள குடம் தத்தம் சுவரூபத்தில் அடங்கிய ஆகாயத்தை வயிறுபெருத்து கண்டஞ்சுருங்கி இடையே குவிந்து தலைநிமிர்ந்திருக்குமாறு காட்டுகின்றது. அங்ஙனமே மாயையும் அவித்தையும் தம்முள் அடங்கிய சைதன்னியத்தை ஈசுவரனையும் ஜீவனையும் காட்டுகின்றதென்பது கருத்து. அடிக்கடி கடமும் சிறிதாய் இருந்து உடைந்தவிடத்து பெரியதோர் குடம்வர அதனிடத்து ஆகாயமும் பருப்பது போல பருத்துத்தோன்றுமாயினும் அதற்கு பருத்தலும் குறைதலும் அமையாது. அங்ஙனமே நேற்று யானையாய் இருந்தவன் இன்றுமனி

தனாயின் அவனிடத்தான்மாவும் பறுத்திருந்தது குறுகுவதில்லை. ஆனால் தாம் அமையுமிடத்திற்கேற்றவாறு பெரிதும் சிறிதுமாகத் தோன்றும் இவற்றின் வேற்றுமையே உள்ளபடி அறியாது அஞ்ஞானத்திற்கதிஷ்டானமாய் நிற்கும். ஆத்துமா சுபாவத்தில் என்றும் ஞானரூபனேயாம். இவன் ஈசனென்ற சேதனனிலும் வேறாய்த்தோன்றினும் அசேதனனாகான். மாயையின் அஞ்ஞானமென்றால் அதனை மரப்பதே. அது அனிர்வசனீயம்; தள்ளத்தக்கது துச்சமென்றும் கூடநினைக்காது தன்மாத்திரையில் தானே நிற்பவனே சொரூபசித்தனெனப்படுவான் என்பது பொருள்.

## அவதரணிகை

இங்ஙனமாயின் உபாதியொழிவதெப்படி? ஒழிந்தாலல்லவோ அதை மரக்கலாம் எனவாசங்கைநிகழ, அதனைமறுத்தோதுகின்றார்.

ஶப்³த³மாயாவ்ருதோ நைவ
தமஸா யாதி புஷ்கரம்
பி⁴ன்னே தமஸி சைகத்வ
மேக ஏவாநுபஶ்யதி || ௭—து

(இ—ள்) சப்தமாயையுடன் கூடினவன் என்றும் இருட்டைவிட்டு புஷ்காத்தில் செல்லமாட்டான். இருள் ஒழிந்தால் ஏகனாய்இருந்தே ஏகத்துவத்தைக் காண்பான்.

(வி—ரை.) சப்தமாயையுடன் கூடினவன் = சப்தமாயைநாதரூபமானமாயை, நாதமென்பது நாமத்தின்பெயர் அதுரூபத்துக்கும் குறிப்பே. இதனால் நாமரூபங்களேமாயையென்றுஏற்பட்டது அம்மாயையினால் ஆவரிக்கப்பட்டவன்; அதாவது மாயோபாதி பெற்றவன். மாயையென்பதுஈண்டு அவித்தையின் மேல்நின்றது; இருட்டைவிட்டு = இருட்டு = பிரகிருதிமுக்குணங்கள் அதனைவிட்டு; புஷ்காரத்தில் = சீதளமான குணத்தைப்போன்ற பிரமானந்தத்தில்; செல்லமாட்டான் = பிரவேசிக்கமாட்டான்; இருள்ஒழிந்தால் = அதுதுலைந்தால்; ஏகனாய் இருந்தே = சஜாதி

விஜாதி சுகதமென்ற மாயாமயபேதம்மூன்றும் ஒழிய எஞ்சிநின்றவை யும்பொருளிரண்டிருக்க ஒன்றை ஒன்றாகப்பாவித்தல் சித்தி தரு மென்றபாவனாத்துவிதம் இதன்பொருளல்ல. தேற்றேகாரத்தால் ஐக்கியந்தேற்றப்படுகின்றமையால் நித்தியசித்தாத்வைதமே இங்கு ஏகசப்தப்பொருளாவது உசிதம். காண்பான் = அனுபவிப்பான்; இதனால் நாமரூபமயப்பிரபஞ்சத்தில் அகப்பட்டுழலாது அநிருதஜ டதுக்கவிலக்ஷண சத்தியஞானானந்தப்பொருளை ஆத்மசுவரூபமாக சாக்ஷாத்கரித்து அதனிடம் நிட்டைகூடினால் மாயை அவனிடத் தணுகாதென்பது இம்மந்திரத்தின் முடிந்தகருத்து. சப்தமாயை என்பதற்கு சப்தரூபமானமாயை அல்லது சப்தத்திற்கிடமான அர்த்தரூபமான மாயை என்று சங்கரானந்த குருமூர்த்திகள் பொருளுரைத்தனர். மற்றது வெளி.

## அவதரணிகை

இனி இடையேசேர்ந்தயோகத்தின் பயனை ஒருவாறுமுடித்து யோகாப்பியாசமுறையையே மேலுந்நிரூபிக்கின்றார்.

ஸ்வராக்ஷரம் பரம் ப்ரஹ்ம
தத³ந்தே க்ஷய அக்ஷரம் |
தத³ந்தாக்ஷரம் த்⁴யாயேத்
யதீ³ச்சே²ச்சா²ந்திமாத்மந: || எ—ஆ

(இ—ள்) சப்தாக்ஷரமும் பரம்பிரம்மமும் இரண்டுளது. அது க்ஷயித்தபிறகு எந்த அக்ஷரம் மிஞ்சும் அந்த அக்ஷரத்தை வித்வான் தியானிக்கவேண்டும். ஆத்மாவின் சாந்தியை இச்சித்தால்.

(வி—ரை) சப்தாக்ஷரம் = சொன்மயமாய் நிற்கும் பிரணவவெழுத்து; அதனையும் பரப்பிரம்மத்தையும் ஒன்றாகநினைத்து தியானிப்பது முதற்படி. அதனிடத்து வாச்சியமாகிய பிரம்மத்தினிடத்தே வாசகமாகிய பிரணவம் லயித்தால் அப்பொழுது வாச்சியமாகிய அக்ஷரம் எஞ்சும். தயாக்ஷராக்ஷ க்ஷரம் பராஹ்ய

௭௯ அவ்வக்ஷரத்தினின்றும் அக்கரமாகாயமீருயதரித்தலால். என்பதாதி சுருதி சூத்திரங்களில் குறிக்கப்பட்ட அக்ஷரப்பொருளாம் அந்த அவ்வக்ஷரத்தை வித்வான்=சாக்ஷாத்கரித்த அறிஞன் தியானிப்பான்=தெளிந்து அதனிடம்நிட்டைபெறுவான்; இவன்நிட்டைக்கு அதிகாரியாவனென விஞநிகழ விளக்குகிறார் ஆத்மாவின் என்பதாதியால்; ஆத்மாவின்=சுவரூபத்தின்; சாந்தியை=ஒழிவைஅவித்தையின் அழிவுபாட்ட பாவத்தினிடமாம் தன்மையை; இச்சித்தால்=முமுக்ஷுவானால் என்பது கருத்து.

## அவதாரணிகை

சப்தாக்ஷரத்தின் பிரஸ்தாபம் வந்தமையால் அதனைநன்கு நிரூபித்து தியானக்கருவியையும் அறியற்பாலதையும் காட்டுகின்றார்.

𑌦𑍍𑌵𑍇 𑌵𑌿𑌦𑍍𑌯𑍇 𑌵𑍇𑌦𑌿𑌤𑌵𑍍𑌯𑍇 𑌤𑍁<br>
𑌶𑌬𑍍𑌦𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌪𑌰𑌂 𑌚 𑌯𑌤𑍍 ।<br>
𑌶𑌬𑍍𑌦𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌿 𑌨𑌿𑌷𑍍𑌣𑌾𑌤𑌃<br>
𑌪𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌧𑌿𑌗𑌚𑍍𑌛𑌤𑌿 ॥ எ—று

(இ—ள்) இரண்டு வித்தைகள் அறிய வேண்டுவன சப்தபிருமமொன்று மேலானதொன்று சப்தபிரும்மத்தில் நிஷ்டையடைந்தவன் சுத்தப்பிரம்மத்தைப்பெறுவான். எ-து

(வி—ரை) இரண்டுவித்தைகள்=ஒன்றுசாதனம், ஒன்று சாத்தியம் சாதனமாய் உள்ளதுரிக்வேதம்முதலியன. சாத்தியமாய்உள்ளதுபிரமம். சாதனம்=உபாயம், சாத்தியம்=விளக்கப்படுவது அல்லது அறியப்படுவது; வித்தை எதனால் அறியப்படுமோ அது அறியப்படும். இரண்டும் பொருளொற்றுமை இல்லாவிடினும் சொல் ஒற்றுமைபற்றி இரண்டையும் ஒருவகையாகக் குறித்தாரென்க. அறியவேண்டுவது=அறிந்து அப்பியசிக்கவேண்டுவது; சப்தபிரமம்=ஓங்காரம்; ரவம் மறை முதலிய சொற்களால் யோகாதிசாஸ்திரங்களில் வியகரிக்கப்பட்ட சூக்குமதமப்பிரணவம். இதனையே சத்தச்சோதி என்பர்; மேலானது=அதற்கு மா

ச்சியமாயுள்ளது. இதனால் நிர்விகல்பசமாதியிலும் நாதத்திற்கு ஹேதுவான சூக்குமதமப் பிரணவத்துடன் முற்றும் ஐக்கியமடைந்தபிரம்மத்தையே தியானம் செய்யவேண்டியதென்று ஏற்பட்டது. இவ்வளவால் நாமரூபங்கடந்த சுவரூபமே அறியற்பாற்றென்று ஏற்படுதலால் கண்டசோஷமாய் சத்தம் எற்றிற்கு எனவிபரீத சங்கைநிகழாவண்ணம் சத்தப்பிரும்மசித்தி அவசியமென்றும் அஃதிலாதாற்கு அபவர்க்கம்கூடாதென்றும் குறிக்கின்றார். சப்தப்பிரமத்தில் = சப்தமெனப்படும்பிரம்மத்தில், நாதத்தில்அல்லது பிரணவத்தில்அல்லதுசப்தத்தை உபாதியாய்ப்பெற்றபிரமசுவரூபத்தில் அதாவதுமந்திரத்தில் என்பது பொருள். நிட்டையடைந்தவன் = முற்றும் உழைத்தவன் சித்திபெற்றவன் என்பதுபொருள். சுத்தபிரும்மத்தைப்பெறுவான் = சுத்தமான உபாதிவிலகிய சுத்தபிரம்மசுவரூபமாவான். ஆதலாற்றான் வேதமும் தமேதம் வேதாநு

வசநேந ப்ராஹ்மணா விவிதிஷந்தி [illegible]

[illegible]

[illegible]

[illegible] அவ்விறைவன்றன்னை அந்தணாளர் அறியவிரும்புவார். ஆரணவசனங்களால் ஆன்மாவன்றோ அடியான்? அறியற்பாலவன் கேழ்க்கப்பாலவன் சல்லடைகொண்டு மாவைச்சலிப்பவர்போலஎங்கே தீரர்மனதால் வாக்கைச்சோதித்தனர் அன்புமலிந்தவர் அங்கே அறிவார் ஒற்றுமைதன்னை இவரது நாவில் மங்களலெக்ஷ்மிவாசமிருத்தலால் என்று பலவாறு நிரூபித்தது. வேறு அநேகவசனங்களும் மஹாபாஷியம் அதன்விவரணம் வையாகரண சித்தாந்த மஞ்சூஷைமுதலிய கிரந்தங்களில் சப்தபிரம்மத்தைப்பட்டன அவற்றை அங்கே காண்க. இப்பொருள் ஜகத்குருநாதருக்குச் சம்மதமல்லவென்று மயங்கக்கூடாது. [illegible] வர்ணங்களே என்றார் உபவருஷபகவான் என்று பாஷியக்காரரால் சாங்கியத்தை யனுசரித்த உபவருஷாசாரியனின்மதமே ஆசாரியர் அநுவதித்தாரன்றி அவருடைய சம்மதமாய் எடுத்தாரில்லை என்பதைப்பற்றி நாகேசபட்டர் மஞ்சூஷையின்கண்ணே விரிவாய் நிரூபித்தருளினார் ஆகையாலெனக.

## அவதரணிகை

இங்ஙனம் சப்தபிரமமும் மோக்ஷபரியந்தம் தொடர்ந்திடுமா யின் எங்ஙனம அத்வைதசித்தியென ஆசங்கைதோன்ற அதற்குச் சமாதானமளிக்கின்றார்.

க்ரந்தமப்யஸ்ய மேதாவீ
ஜ்ஞாநவிஜ்ஞாநதத்பர: ।
பலாலமிவ தாந்யார்தீ
த்யஜேத் க்ரந்தமசேஷத: ॥ எ—து

(இ—ள்) மேதாவியாய் உள்ளவன் ஞானவிஞ்ஞானங்களைப்பெறுவதற்காக கிரந்தங்களைப்படித்து தான்னியத்தை அபேக்ஷித்தவன் வைக்கோலைவிடுவதுபோல கிரந்தங்களைமுழுதும் விடவேண்டும். எ—து

(வி—ரை.) கிரந்தங்களை முறைப்படிகற்று ஞானவிஞ்ஞானங்களைபெற்று இறுதியில் இருக்கவேண்டிய நிலைமை இதிற்குறிக்கப்படுகின்றது. ஞானம்என்பது மோக்ஷஞானம்; விஞ்ஞானம் =மற்றையவறிவு; இரண்டையும் முற்றும்கற்று உபாயமாக விஞ்ஞானத்தையும் உபேயமாக மோக்ஷஞானத்தையும் பெற்றுக்கொண்டு தானியத்தை அபேக்ஷிப்பவன் பயிரிட்டது முதல்கதிர் உண்டாம் காலம்வரை வைக்கோலேயே காப்பாற்றி இறுதியில் கதிரைக்கைக்கொண்டு அதனைப்பசுக்களுக்கு விட்டுவிடுவான் அப்படியே இவனும் அப்பியாசங்களுக்கு பிரயோஜனமான ஞானம் கிடைத்தபிறகு தான் அதனைவிடவேண்டுமென்பது இதன்மூடிந்தகருத்தாம். எப்படி முளைமுதல் விளைவதற்குமுன்வரை புல்லைப்பயிரைத்தலைத்தவனுக்கு பயன்முயற்கோடோ? அங்ஙனம் சுவரூபாநந்தம் கிடைக்காதவரை கிரந்தங்களைவிட்டவருக்கு சித்திமுயற்கோடே என்பது இத்திருஷ்டாந்தத்தின் பயனாம்.

## அவதரணிகை

இங்ஙனம் கிரந்தங்களெல்லாம் ஞானத்திற்கு அப்பியசிக்கவேண்டி ஏற்பட்டாலும் ஒவ்வொருவித்தைகளில் ஒவ்வொரு

யிபாடு குறிக்கப்படுதலால் கருவிகளின் காரியமும் 'வேற்றுமைப் படுமாயினும் அத்வைதம் சித்திப்பது கூடாதோவென ஆசங்கை எதிர்நோக்கி எல்லாவித்தைகளையும் ஒருபொருளின்கண் உபசங் கரிக்கின்றார்.

> ஹவாமெநகவணூிநா
> க்ஷீரஸ்யைகவணீதா |
> க்ஷீரவத்ருஶ்யதெஜ்ஞாநம்
> லிங்கிநஸ்துஹவாம்யதா ||

( இ—ள் ) பசுக்கள் பலவர்ணமாயிருந்தாலும் பால் ஒருவர்ணமாய் இருக்கும் அப்படியே ஞானம் பால்போல காணப்படும் லிங்கமுடைய வஸ்துக்கள் கோக்களேபலவாம்

(வி—ரை) வெண்மை, கருமை, செம்மைமுதலியபன்னிறங் கள்பெற்ற கோக்கள் பலவகைப்பட்டிருந்தாலும் அதன் பால்த யிர் நெய்முதலியவை ஒருதன்மையுடையனவாகக் காணப்படுகின் றனவன்றி இதுவெண்பசுவின்பால் இதுகபிலையின்பாலென்பதறி வேற்றுமையாண்டும் அகப்படாமையின் ஞானதாரசாஸ்திரங்க ள்பல்வகைப்பட்டிருப்பினும் அதனிடத்தே நிரூபிக்கப்படும் ஞா னமட்டும் ஒருவகைப்பட்டதாகவே இருக்குமென்பது இம்மந்தி ரத்தின் முடிந்தகருத்து "நிறமென்றது" அதன்வயது அளவுமு தலியவற்றிற்கும் குறிப்பீப வெவ்வேறுவயதும் வெவ்வேறுஅளவு முள்ளபசுக்களுக்கும் பாலொற்றுமைகாண்டலால். இவையெலாம் ஒருபாலை உத்தேசித்து ஏற்றுக்கொள்ளப்படுவனவாமபோல பழ யதும் புதியதுமாய் பருத்தும் சிறுத்தும் பலநூல்கள் இருப்பி னும் அவற்றுள் அடையத்தக்கதோர் ஞானம் ஒன்றேயுளதாம்.

## அவதரணிகை

சென்னெல் வெண்ணெல் முதலியநெற்களில் உமியிலுண் ளநிறம் விதியில் காணப்படுவதில்லைபோலவும் முளையிலும் இலையி லும் காணப்படுவதுஇல்லைபோலவும் எல்லாவித்தைகளிலும்ஞான மமைந்திருக்குமெனக்காட்டவேராய் பாலிலமைந்தநெய்யைதிருஷ் டாந்தமாகக்கொண்டு உண்மையை உபதேசிக்கின்றார்.

𑌘𑍃𑌤𑌮𑌿𑌵𑌪𑌯𑌸𑌿𑌨𑌿𑌗𑍂𑌢𑌂
𑌭𑍂𑌤𑍇𑌭𑍂𑌤𑍇𑌚𑌵𑌸𑌤𑌿𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌂।
𑌸𑌤𑌤𑌂𑌮𑌨𑍍𑌥𑌯𑌿𑌤𑌵𑍍𑌯𑌂
𑌮𑌨𑌸𑌾𑌮𑌨𑍍𑌥𑌾𑌨𑌭𑍂𑌤𑍇𑌨॥ என்று

( இ—ள் ) பாலில்மறைந்திருக்கும் நெய்யைப்போல ஞானம் ஒவ்வொரு பூதங்களிலும் அபூதத்திலும் இருக்கின்றது. அதனை மனதிடத்தே வைத்தும் மனசைமத்தாக்கி இடைவிடாது கடையவேண்டும். எ-று

(வி—ரை) பாலில் = ஆவின்பாலில்; மறைந்திருக்கிற 𑌘𑍃𑌤𑌾𑌤𑍍𑌪𑌰𑌂𑌮𑌣𑍍𑌡𑌮𑌿𑌵𑌾𑌤𑌿𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌂 பாலிலும்வேறாய் அதிருக்குமமாய் உள்ள ஏடையைப்போல என்பதாதிவசனங்களால் நெய்யைப்போல = எப்படிநெய்யானது பாலில் மறைந்துவிடப்படுவது அதனைக் காச்சுதல் முதலிய சம்ஸ்காரங்களின்றி அகப்படாதோ அப்படியே ஒவ்வொருபூதத்திலும் = பிராகிருதசரீரங்களிலும்; அபூதத்திலும் = அபூதசதாசிவாதி விக்கிரஹங்களிலும் ஞானமாத்திர ஆத்மசுவரூபம் இருக்கின்றது அது இருந்தும் பிரகாசிப்பதில்லை. அதனை கடைதலுக்கொப்பான சிந்தித்தல் என்றவிருத்தியால் வெளிப்படுத்தவேண்டுமென்கிறார் அதனை என்பதாதியால்; மனதில் = பாண்டம்போன்ற மனதிற்றானே அதனையே மத்தாக்கிக் கடையவேண்டும். ஒன்றே ஆதாரமாவதும் கடையும் கோலாவதும் எப்படியெனில், மனதென்றதற்கு ஓரிடத்தில் இந்திரியமும் மற்றோரிடத்தில் மனமென்ற சிந்தித்தல் பொருளாய்க் கொள்ளின் குற்றமில்லையாம். இந்தச் செய்யுளில் மூன்றாம் அடியில் மட்டும் ஓர் இசை அதிகப்பட்டிருக்கின்றது. ஆனாலும் வேதவிலக்கணம்பற்றி அஃது குறையாகாதாமென்க. மூலத்தில் 𑌘𑍃𑌤𑌮𑌿𑌵 என்பதற்குமாறாக 𑌘𑌟𑌮𑌿𑌵 என்றுசங்கரானந்தமுனிவர் வியாக்கியானித்திருக்கின்றார், தண்ணீரில் அமிழ்ந்திருக்கும் குடத்தைப்போல்என்று. அதற்கும் அமையுமாயினும் மேலேகடைசல்முதலியவற்றை ஸ்தாபித்திருப்பதால் அது அதனிடத்தே பொருந்தாமைபற்றி நாராயணீயம் முதலிய வியாக்கியானம செய்யப்பட்டது மூன்றாம் பாதத்

தில் மனஸி என்பதையெடுத்து ஊயிதவறு என்பதற்கு பதி லாய்ஊயிதவறு என்றுசேர்த்து பட்டநாராயணன் ஒருவாறு இலக்கணத்தைநிறவிப்பொருளிட்டார். அப்பாடத்தில் மனசு இரு முறை எடுக்கப்பட்டமையால் அதற்குப்பொருள் வேற்றுமையும் யாப்பிலக்கணத்திற்கோர் கதியும் கற்பிக்கவேண்டியதவசியமில்லை யென்க. மற்றதுவெளி; இதனால் க்ஷீரேஸர்பிரிவாபிதம் பாலில் நெய் அமைந்தாற்போல என்பதாதி பலவேதாந்தங்க ளின் கிடைத்தபொருள் தழுவப்பட்டது,

## அவதரணிகை

இனி அடையக்கூடிய ஆன்மநவனீதம் எடுக்கவேண்டியசம் பிரதாயத்தை நிரூபிக்கின்றார்.

ஜ்ஞாநநேத்ரம் ஸமாதாய
சோத்தரேத் வஹ்நிவத் பரம் |
நிஷ்கலம் நிச்சலம் சாந்தம்
தத்ப்ரஹ்மாஹமிதி ஸ்ம்ருதம் || என்று

(இ—ள்) ஞானமென்ற கண்ணை நிலைநிறுத்தி நெருப் புடன் சேர்த்து மெள்ள எடுக்கவேண்டும் நிஷ்களமாயும் நி ச்சலமாயும் சாந்தமாயுமுள்ள அந்தபிரமமே யானென அறி யவேண்டும். எ—று

(வி—ரை) ஆன்மாவென்றவெண்ணை மற்றையக்கண்ணுக்கு புலப்படாதாகையால் ஞானக்கண்ணை நிலைநாட்டிஎன்றது.மெள்ள எடுக்கவேண்டும், ஆத்மநவனீதஸ்தானமாகிய சவிசேஷபிரம்மசுவ ரூபத்தைக்கறைவேண்டும். வெண்ணையைஉறுக்கநெருப்பு இன்றிய மையாததுபோல இப்பிரமநவநீதத்தை=மாயாமயப்பிரபஞ்சத்தை விட்டுப்பிரித்து எடுப்பதற்கு தகுமென்ற நெருப்புவேண்டுமென்ப தாகருத்து. எடுக்கவேண்டும்=உலகவிலக்ஷணமாக தியானிக்கவே ண்டும்தியானத்தின் முறையைக்குறிக்கின்றார், நிஷ்களமென்பதா தியால்.நிஷ்களம்=அம்சமில்லாதது அல்லது பிரகிருதிநிடதம்முத

வியன கூறினவாறு பகுதிகளற்றது. நிச்சலமாயும் = பரிபூர்ணமானதால்சாந்தமாயும் = பிரபஞ்சம் ஒழிந்தமையால்; அந்த = சுட்டுப்பொருளாகாத; பிரமம் = பரிபூர்ணம்தானேயென = அபரோக்ஷமாய் சாக்ஷாத்கரித்து; அறியவேண்டும் = அறியப்படவேண்டுமென வேதாந்தங்களால் நிரூபிக்கப்பட்டதொன்றும். இவ்வளவால்பிரணவநிஷ்டையுடைய ஒருவன் மனதை நிர்விகல்பமாக்கி, பரமேசுவரனை வழிப்பட்டு அவனருளால் உலகெலாமவனே யெனக்கண்டு அவனேயாவான என்பதே சித்திக்குச்சித்தாந்தமான பரமாத்துவிதசித்தாந்தமெனச்சித்தித்தது.

## அவதாரிகை

இனி பிரமவித்தின் அனுபவத்தைக்குறிப்பாராய் வித்தையை உபசங்கரிக்கின்றார்.

ஸர்வபூதாதிவாஸஞ்ச
யத்பூதேஷு வஸத்யபி।
ஸர்வாநுக்ராஹகத்வேந
ததஸ்ம்யஹம் வாஸுதேவ:
ததஸ்ம்யஹம் வாஸுதேவ: இத்யுபநிஷத்॥ என்று

(இ—ள்) எல்லாப்பூதங்கட்கும் இருப்பிடமாயும் எல்லாவற்றையும் அநுக்கிரகிப்பவனுயுமுள்ள வாசுதேவன் நானே அந்தவாசுதேவன்நானேஎன்பதுஉபநிஷத்து. எ-று

(வி—ரை) எல்லாப்பூதங்கட்கும் இருப்பிடம் = எல்லாவற்றிற்கும் முதற்காரணமாதலால் மண்ணினிடத்துக்குடமிருப்பதுபோல்எல்லாமவனிடத்தே இருக்குமென்பதுபொருள். எல்லாப்பூதங்களிலும் அவன் இருப்பது அந்தர்யாமியாதலானும் நிமித்தமாதலானுமென்க. அதுவே உலகத்திற்கு முதற்காரணமானபிரமதருமம் அதுவேயானெனில் பிரமமேயாமென்பதுபொருள். வாசுதேவன் உலகம் முதற்காரணமென்றும் பிரமகோடியென்றும் பிரமத்தின் தருமமென்றும் ஸ்ரீ த அத்வைதவித்தியாசாரியரான ஸ்ரீமது நீலகண்டதீக்ஷிதேந்திரசுவாமிகள் ரத்னத்திரயபரீக்ஷையில் ததேவாவ

[illegible] அவ்யாதிபுருஷனது பரிணாமமே ஆகாயாதிவிகாரப்பிரபஞ்சமெல்லாம் என்று தொடங்கிய சுலோகத்தால் நிரூபித்தருளினதுமன்றி சாம்பவர்களுக்கு அவரது வழிபாடு இன்றியமையாதெனவும்காட்டினார் என்பது ஓர்சிறிது. இருமுறை கூறியது பொலிவைக்காட்டியது. இங்ஙனம் உபநிஷத்தென்பது சம்பிரதாய வாக்கியம். இங்ஙனம் நிக்கிரஹத்திற்கோர் உபாயமும், உயர்நாததத்துவவிவேகமும், உசிதரான அதிகாரிகட்கெடுத்துக் காட்டப்பட்டதென்பது இவ்வுபநிடதபிரமேயத்தின் ஏகதேசமாம். இச்சிற்றுரை முற்றுமதியணிமுக்கட்தலைவன் திருவடிமலரடி செலுத்தியசிறுதளிர்பில்வம்போலதாய் சுபம்துபெருக்குக.

இங்ஙனங் கவுணியகுலப் பாலாழிக்குக் கவுத்துவ மணியாய்த்தோன்றி, ஸ்ரீமேதாதெக்ஷிணாமூர்த்தி கருணாகடாக்ஷத்தாற் சகலகலைகளுமோதியுணர்ந்து மிச்சிரமண்டலத் திற்றமது விஜயப்பிரதாபநிலைபெறநாட்டிய மஹாதேவதீட்சிதர் வம்சத்திலகராய வையாகரண ஸார்வபௌம ஸ்ரீ ராமஸ்வாமிதீக்ஷிதர் செல்வக்குமாரரும்; ஸ்ரீஸீதாம்பா கர்ப்பசுத்தி முத்தமொத்தவரும், ஸ்ரீமத் பாரத்வாஜகுலஜலதிக்குக் கவுத்துவமணியாய் அத்வைதவித்தியாசாரியராய், நூற்றுநாலு கிரந்தங்களை நிர்வகித்தருளிய ஸ்ரீமது அப்பையதீக்ஷிதேந்திரர் வம்சத்தில் அவதரித்த ஷட்சாஸ்திரவல்லப பரமேசுவர உபநிஷன்மார்க்கப் பிரவர்த்தக ஸ்ரீமஹாமஹோபாத்தியாய
ஸ்ரீமது தியாகராஜ குருபுங்கவர் சரணஸேவாபராயணரும்,
ப்ரத்யக் பரசிவநிஷ்டாதுரந்தர பரசாம்பவபாதபத்ம
ரேணுசேவனத்தி லன்புகந்துள்ளவரும்
"ப்ரம்மவித்தியா" பத்திராதிபருமான
பரஸமய பஞ்சானன் பாஞ்சஜன்ய
பண்டித ஸ்ரீமத் ஸ்ரீநிவாஸமகிபுங்கவர்
வடமொழியிலியற்றிய
அமிர்தபிந்தூபநிஷத்பிரகாசம்
என்றபேருரைக்கிணங்க
தென்மொழியில்மொழிபெயர்க்கப்பட்டு
பொலிவெய்தியது.

---

# அமிர்தபிந்தூபநிடத தாத்பரியசங்கிரகம்

---

இவ்வுபநிடதம் சுத்தாத்வைத வித்தையென்பது இதனிடத்துள்ள ஜலசந்திரதிருஷ்டாந்தம், கடாகாசபடாகாசதிருஷ்டாந்தம், முதலியவற்றால் நன்கு புலப்படும். இக்கருத்தமைந்த சில வசனங்கள் சுக்கிரபகவானால் சூரபத்மனுக்கு உபதேசிக்கப்பட்டனவாக சங்கரசம்ஹிதை கூறுகின்றது. அதனைச் சிலர் சுக்கிரபகவான் அவ்வசுரவேந்தனை மயக்க வேண்டி விபரீத உபதேசம் செய்தார் என்பார். அது முற்றும் தவறு. அவர் அப்பரம்பரைக்காசிரியராகவே அவ்வித அநீதி அவரிடத்தில் உண்டென்பது நியாயமாகாமையாலென்க. பரமசாம்பவசிகாமணியாய்மிருதசஞ்சீவி வித்தைக்குடையவராய் எழுந்தருளிய [illegible] கூறுவது நியாயமல்ல. தாமே நீதிநூலுக்காசிரியராயிருந்து [illegible] செய்தாரென்பதும் அடாது. ததீசிமாமுனிவர் [illegible] இருந்தும் தம்புத்திரனுக்கு உபதேசித்த உபதேசம் [illegible] பயன்படாது ஒழிந்தவாறு அவ்வசுரனிடத்து அவ்வுபதேசம் பயன்படாதொழியினும். அதனால் வித்தைக்கோர் குறைநேராது. மதுவுக்கும் பாணனுக்கும் உபதேசித்தருளிய அம்மஹானே அகந்தை மேலீட்டினால் அமரர் விரோதியாய் அநேக அண்டங்களையாண்ட அசுரர்கோமானிடம் அவ்வித்தை பயன்படாதொழிந்தது. துரியோதனாதியோருக்குத் துரோணர் உபதேசம்போலவும், விரோசனனுக்கு இந்திரன் உபதேசம்போலவும், சீடர்குறையால் குறைவுற்றிருக்கலாமென்க. இது [illegible]களால் அத்வைத சாஸ்திரமென விளக்கவேண்டுவதவசியமின்று. இதனிடத்தமைந்த இருபத்திரண்டு மந்திரங்களுள் ஒரு மந்திரமாவது அநேகாத்மவாதம், சகுணவாதம் முதலிய வாதங்கட்கு சற்றேனும் இடந்தந்திருந்தாலன்றோ யாம் அதற்கென உபக்கிரமம்முதலிய குறிப்புகளைக்கொண்டு பொருட்டெளிபுரைக்கவேண்டும். இவ்வுபநிடதம் மனச்சங்கற்பத்தாலேயுலகம் கற்பிக்கப்பட்டதென்றும், மனமொழிய உலகம் ஒழியுமென்றும், அதுவிசாரத்தாலே ஒழியுமென்றும், ஆன்மகைவல்யமே சத்தியமெனவும், நிரூபிக்கின்றதொன்றாதலால் அத்வைதிகளுக்கு இன்றியமையாத பிரமவித்தையாமிதென்பது ஓர் சிறிது. சுபம்.

அமிர்தபிந்தூபநிடத தாத்பரியசங்கிரகம்.

முற்றிற்று.

# அமிர்தபிந்தூபநிஷத அரும்பதவிளக்கம்

—(*)—

அசிந்த்யம் = சிந்திக்கத்தகாதது.

அபிமந்தா = அடைவான்- அறிவான்.

அர்த்தீ = வேண்டுவோன்- பொருளுடையவன்.

அநாதி: = ஆதியற்றவன்-

அநுபச்யதி = பின்பற்றுவான் பார்ப்பான்.

அநுபவ: = அநுபவம்.

அந்யாய: = நியாயம்! கடந்தது.

அப்ரமேயம் = எவ்வளவைக்குமகப்படாதது,

அப்ராக்ருத: = அப்பிராகிருதம்-; பூதங்களின்விகாரமல்லாதது

அசுத்தம் = தூய்மையற்றது-

அஸ்வர: = சப்தமில்லாதது, வாசகமற்றது.

ஆத்மா = சேதனன், ஜீவன்-

ஆஸம்யோஜக: = சேர்ப்பான், ஒட்டுவான்-

உத்பத்தி: = ஸிருஷ்டி, உண்டாதல்-

ஏகத்வம் = ஒற்றுமை.

காமவிவர்ஜிதம் = விருப்பமற்றது.

காமஸங்கல்பம் = ஒருபொருள்வேண்டுமென்றசங்கற்பம்

க்ரந்தா: = நூல்கள்

கடஸம்வ்ருதம் = குடத்திலடங்கியது

சிந்த்யம் = தியானிக்கத்தக்கது

ஜலசந்த்ரவத் = நீரில்சந்திரன்போல

ஜ்ஞானம் = அறிவு அறிவின்கருவி

ஜ்ஞானநேத்ரம் = ஞானக்கண்

தம: = இருள் முக்குணமயமான ப்ரகிருதி

த்ருஷ்டாந்த: = திருஷ்டாந்தம் உவமானம்

த்யானம் = நினைத்தல் நினைக்கும் கருவி-
நபோவத் = பற்றற்றவன் ஆகாயம்போன்றவன்
ந்யாய: = நியாயம் நீதி
நிரஸ்தவிஷயாஸங்கம் = விஷயப்பற்றில்லாதது
நிரோத: = தகைதல் அடக்குதல்
நிர்விஷயம் = விஷயமற்றது.
நிஸ்ப்ருஹம் = ஆசையற்றது
நிஷ்ணாத: = ஆழ்ந்தவன் பயின்றவன்
பதம் = இடம் அடையவேண்டுவது,
பர: = மேல், வேறு, பிறகுளது
பரம் = மாயைகடந்தது உத்தமம்
பலாலம் = வைக்கோல் புல்
பஶ்யதே = காணப்படுகிறது
பக்ஷபாதவிநிர்முக்த: = பக்ஷபாதமற்றது, தாரதம்யமற்றது
புஷ்கரம் = குளம் தாமரை
பத்த: = கட்டுப்பட்டவன் ஸம்ஸாரி
ப்ரஹ்ம = பிரம்மம் ஈசுவரன்-
பாவ: = பவனிடம் தோன்றியது பொருள் அபிப்ராயம் தன்மை
பூதம் = பிருதிவிமுதலியன சென்றது-
பூதாத்மா = சரீரம் சரீராபிமானி-
ம்ருகயிதவ்யம் = தேடவேண்டுவது.
மந: = மனம் சிந்தித்தல்
மந்தவ்ய: = நினைக்கப்படுவது தியானிக்கவேண்டுவது
முக்த: = முக்திபெற்றவன் சன்யாசி-
முமுக்ஷு: = மோக்ஷவிருப்பமுடையவன் வானப்பிரஸ்தன்
மேதாவீ = மேதையுடையவன் தியானிப்பவன்

யோக: = சேர்க்கை அஷ்டாங்கயோகம்

ரந்த்ரிண: = குழியுடையன குழிக்கிடமாவன.

வஹ்நிவத் = நெருப்புடையது,

வாஸுதேவ: = நாராயணன் எல்லாவற்றிற்கும காரணனாவன்.

விஜ்ஞானம் = மோக்ஷஸம்பந்தமற்ற விஷயவறிவு,

வித்யா = அறிவு அறியும் கருவி.

விஷயாஸக்தம் = விஷயத்திலாழ்ந்தது:

விஸ்தர: = விரிவு

ஶப்தமாயா = சொற்சாலம், சொல்மயமானமாயை

ஶப்தாக்ஷரம் = சொல்லான அக்ஷரம் பிரணவம்

ஶாந்தி: = ஒழிவு ஒடுக்கம்

ஶுத்தம் = தூய்மையுடையது

ஸம்வேத்ருகே = ஆதும் அமையும்

ஸ்வர: = பிரணவம் ஒலி உயிரெழுத்து

ஸாதக: = சாதிப்பவன் கிருகஸ்தன்

ஸ்தாநத்ரயம் = மூன்றுஇடங்கள் மூவவத்தைகள்

ஹ்ருத் = இதயம் நடு

ஹேது: = ஏது காரணம்

அமிர்தபிந்தூபநிடதஅரும்பதவிளக்கம்

முற்றிற்று.

[illegible]

[illegible]

[illegible]

(*)

க. [illegible]

உ. [illegible]

ங. [illegible]

ச. [illegible]

ரு. [illegible]

சா. [illegible]

எ. [illegible]

அ. [illegible]

கூ. [illegible]

௰. [illegible]

௧௧. [illegible]

௧௨. [illegible]

௧௩. [illegible]

௧௪. [illegible]

௧௫. [illegible]

௧௬. [illegible]

௧௭. [illegible]

௧௮. [illegible]

௧௯. [illegible]

௨௰. [illegible]

௨௧. [illegible]

—— (*) ——